

திருச்சி மாவட்டம் அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்டது பனையபுரம் ஊராட்சி. இந்த ஊராட்சியில் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி உள்ளது. இந்த பள்ளியில் 52 மாணவர்களும் 39 மாணவிகள் பட 91 மாணவ மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். இந்த நிலையில் அந்த பகுதிக்கு வந்த தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திடீரென பள்ளியில் ஆய்வு பணியை மேற்கொண்டார். மாணவர்களுக்கு வழங்கப்படும் காலை உணவு பற்றியும் ஆசிரியர்களிடம் கேட்டு அறிந்தார், மேலும் பள்ளி மாணவர்களிடம் பாடப் புத்தகங்களை படிக்கச் சொல்லி கேட்டறிந்ததோடு நன்றாக படிக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.




சென்னையில் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு நேற்று (12.06.2024) சென்னையில் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன் தலைமையில் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த், முதன்மை செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த், மு.வே. செந்தில் குமார், இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், திரையுலக பிரப லங்கள், தொழிலாளர் துறை உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

### கோவை – தி.மு.க. முப்பெரும் விழா!

# திருவண்ணாமலை தெற்கு மாவட்டத்தினர் ஜூன் 15-ல் அலைகடலென அணிவகுப்பீர்!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!



சென்னை, ஜூன் 13 -

ஜூன் 15 அன்று கோவையில் நடைபெறும் தி.மு.க. முப்பெரும் விழாவிற்கு, திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், தோழர்கள் அலைகடலென திரள்வீர் என பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் கடந்த ஜூன் 8ஆம் தேதியில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தின் படி தமிழினத் தலைவர் கலைஞரின் நூற்றாண்டு நிறைவு விழா - 40 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றி அளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா - சீர் மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்தி சென்ற கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு விழா என முப்பெரும் விழா அறிவிக்கப்பட்டது.

ஜூன் 15 சனிக்கிழமை அன்று கோவை, கொடிசியா மைதானத்தில் நடைபெறவுள்ள விழாவில், கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கூட்டணி கட்சி தலைவர்கள் மற்றும் வெற்றி பெற்ற 40 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்கிறார்கள்.

ஏனவே திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் நிர்வாகிகள், கிளை மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் அலைகடலெனக திரண்டுவந்து, கோவை முப்பெரும் விழாவினை சிறப்பித்திட கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

### சென்னையில்

# குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்புப் பேரணி!

## அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமையில்!

சென்னை, ஜூன் 13 -

குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு நேற்று (12.06.2024) சென்னையில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி. வெ. கணேசன், தலைமையில் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின நிகழ்ச்சி நடைபெற்றது.

குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12ம் தேதி உலக அளவில் அனுசரிக்கப்பட்டு வருகிறது. குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்புதினவிழிப்புணர்வு நிகழ்ச்சி தொழிலாளர் துறையின் சார்பாக நேற்று (12.06.2024) சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களிலும் அனுசரிக்கப்படுகிறது.

இன்றைய தினத்தில் மாநில அளவிலான குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்புதினவிழிப்புணர்வு நிகழ்ச்சி, சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக விழா அரங்கத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு சி.வெ. கணேசன், அவர்களின் தலைமையில் நடைப்பெற்றது.

இப்பேரணியில் அமைச்சர் தலைமையில் கரகாட்டம், பறையாட்டம் மற்றும் மரக்கால் ஆட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான கையெழுத்து இயக்கம் துவக்கி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிராக உறுதிமொழி எடுக்கப்பட்டது. குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் குறித்தான விழிப்புணர்வு குறும்படம் வெளியிடப்பட்டது. குழந்தைத் தொழிலாளர் முறையிலிருந்து மீட்கப்பட்ட வர்கள் அவர்களது அனுபவங்களை பகிர்ந்தனர். இந்நிகழ்ச்சியில் குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதலில் சிறப்பாக பணிபுரிந்த கள அலுவலர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங் களுக்கு கேடயம் வழங்கப்பட்டது. குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் குறித்த விழிப்புணர்வு ஒரு நிமிட குறும்படம் மற்றும் ஓவியப் போட்டியில் பரிசு பெற்ற கல்லூரி மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் ரொக்கப்பரிசு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் 2025ம் ஆண்டுக்குள் குழந்தைத் தொழிலாளர் இல்லாத தமிழ்நாட்டினை உருவாக்கிட அனைவரும் ஒன்றுபட்டு செயல்படுவோம் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த், முதன்மை செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த், மு.வே. செந்தில் குமார், இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், திரையுலக பிரப லங்கள், தொழிலாளர் துறை உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!



விழுப்புரம், ஜூன் 13 -

விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் நாளை (14.6.2024 - வெள்ளிக்கிழமை) காலை 10 மணி அளவில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கத்தில் மாவட்ட பொறுப்பாளர் ஆகிய எனது தலைமையிலும் , மாவட்ட அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் விக்கிரவாண்டி வேட்பாளரஅன்னியூர் சிவா உள்ளிட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள் முன்னிலை யிலும் நடைபெறுகிறது.

கூட்டத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர், உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகிறார். அவ்வமயம், செயற்குழு , பொதுக்குழு உறுப்பினர்கள் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கழகச் செயல்வீரர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 1. ஜூலை 10 தேதி நடைபெற்ற உள்ள விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தல் பணிகள்.

2. ஜூன் 15 கோவையில் நடைபெற உள்ள முப்பெரும் விழாவில் விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகத்தினர் கலந்து கொள்வது.

இவ்வாறு விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி தெரிவித்துள்ளார்.

### திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர் !

# ஜூன் 15ஆம் தேதி கோவையில் முப்பெரும் விழா!

## மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. வேண்டுகோள் !



திருவள்ளூர், ஜூன் 13 -

கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்துக் கொள்ளும் “முப்பெரும் விழா பொதுக் கூட்டத்தில்” திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்துக் கொள்ள வேண்டுமென மாவட்ட திமுக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. வேண்டுகோள் வருமாறு:

வருகின்ற ஜுன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் வெற்றி நாயகன் தமிழ்நாடு முதலமைச்சர். கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்துக் கொள்ளும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு தமிழ் நாட்டை வழிநடத்திச் செல்லும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா என நடைபெறும் “முப்பெரும் விழா பொதுக் கூட்டத்தில்” திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

இக்கூட்டத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள். இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் ஒன்றிய பெருந்தலைவர்கள், நகரமன்றதலைவர்கள், பேரூராட்சி மன்றதலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக் குழு உறுப்பினர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள். முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வாக்குச் சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்து ள்ளார்.

### ஏ.ஆர்.பி.எம். காமராஜ் தலைமை! க.வே. மோகன் வரவேற்புரையில்

# 119வது வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா!

## நே.சிற்றரசு – சைதை சாதிக் – ஆசிப் இறையன்பன் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 13 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி சென்னை மேற்கு மாவட்டம் திருவல்லிக்கேணி பகுதி 119-வது வட்டம் சார்பாக நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேற்று (12.06.2024, புதன்கிழமை) ராமராவ் கார்டன் இராயப்பேட்டை சென்னை - 14-ல் நடைபெற்றது.

விழாவிற்கு பகுதி செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ் தலைமை வகித்தார்.

வட்ட செயலாளர் க. வே. மோகன் வரவேற்றார்.

இவ்விழாவில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, கழகப் பேச்சாளர் சைதை சாதிக், கொள்கை பரப்பு கழக பாடகர் ஆசிப் இறையன்பன் ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்கினர்.

ஆர்.என்.துரை, வே. கமலா செழியன், ரவி ராஜ் குமார், கே.திருநாவுக்கரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள் து.விக்டர், வி.எஸ். கலை, ஏ.எஸ்.அகஸ்டின் பாபு, கே.சங்கீதா மற்றும் மருத்துவர் அ.சுபேர்கான், ஏ.எஸ். அகஸ்டின் பாபு, கே.சங்கீதா மற்றும் மருத்துவர் அ.சுபேர்கான், வி.பி. பொன்னரசு, வி.என். ராஜன், வழக்கறிஞர் வி.பிரகாஷ், மருத்துவர் அபிஸ் யுல்லா, எம்.கே.ஆனந்த், இ.இளம் பாரதி, ரா.பத்மாவதி, ஆர்.ரஞ்ஜித்குமார், எல்.பாலு, எஸ்.ரவீந்திரன், க.பாலாஜி, இ.மாரி, ஜி. சேகர், பி.திவ்யா, எஸ். மகேஸ்வரி, ம.தயாநிதி, சி.தினகரன், எம்.பிரோம் ராஜா, மங்கை ராஜ்குமார், ஐ.சி.எப். எம்.சங்கர், ஜெ. விஜயகுமார், என்.ரவி, கே.பிரபு, கே.ஜி.செந்தில்குமார், எஸ்.சசிகுமார் மற்றும் பலர் பங்கேற்றனர்.



நாகை மாவட்டம் நாகையில் இருந்து அக்கரைப்பேட்டைக்கு செல்லும் வழியில் உள்ள இரல்வே கேட் உயர் மட்ட மேம்பாலம் கட்டுமான பணி நடைபெறுவதை முன்னிட்டு மாற்று பாதை அமைப்பது தொடர்பாக நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன், நாகை மாவட்ட ஆட்சித்தலைவர்ஜானிடாம் வர்கீஸ் ஆகியோர் ஆய்வு செய்தனர். உடன் நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், நாகை வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சிக்கல் என்.ஆனந்த், மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் ஆர்.ஏ.டி.அண்ணாதுரை மற்றும் பலர் உள்ளனர்.

# மானாமதுரையில் பள்ளி மாணவர்களுக்கு

## இலவசநோட்டு பாடப்புத்தகங்கள் – தமிழரசி எம்.எல்.ஏ. வழங்கினார்!

சிவகங்கை. ஜூன் 13 -

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தாலுகா கல்குறிச்சி அரசு ஆரம்ப பள்ளியில் தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவின் பேரில் பள்ளி மாணவ-மாணவிகளுக்கு விலையில்லா இலவச பாட நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சி திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

பள்ளி மாணவ-மாணவிகளுக்கு இலவச பாட நோட்டுப் புத்தகங்களை வழங்கியும், எண்ணும் எழுத்தும் நிகழ்ச்சியினை துவங்கி வைத்து திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. சிறப்புரை யாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ .நகர மன்ற தலைவர். எஸ். மாரியப்பன் கென்னடி, மானாமதுரை ஒன்றியக்குழு தலைவர் திருமதி லதா அண்ணாதுரை, துணை தலைவர் முத்துச்சாமி, வட்டார கல்வி அலுவலர்கள் அ.பால்ராஜ்,

அமிஸ்தா பானு, ஒன்றிய செயலாளர்கள் துரை ராஜா மணி. எம். அண்ணாத் துரை, கடம்ப சாமி, ஒன்றிய கவுன்சிலர் ராதா சிவச்சந்திரன் மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் வளர்மதி, உட்பட ஆசிரியர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள்.



கோவை வடக்கு மாவட்ட மாணவர் அணி தி.மு.க. சார்பில் என்.ஜி.பி. கல்லூரி, கிருஷ்ணா கல்லூரி, கற்பகம் கல்லூரி, கே.பி.ஆர். கல்லூரி மாணவர்கள் நூற்றுக்கு மேற்பட்டோர் கோவை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தொ.ரவி தலைமையில், கோவை வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் செ.அந்தோணிராஜ் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் பூவை சி.ஜெரால்டு, மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் வி.ஜி.கோகுல் , மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ஞா.சிவகுமார் ஆகியோர் கலந்து கொண்டு மாணவரணியில் புதிதாக இணைந்த வர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.